# காலநடை பராமரிப்புத் துறை

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு, வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, அழகப்பபுரம், திங்கள்நகர், செம்மங்கலா ஆகிய கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகளை நிறுவியுள்ளது. வறட்சி நிலை சீராகும் வரை ஒரு கால்நடைக்கு தினம் 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு ஒரு வாரத்திற்கு 105 கிலோ வரை விவசாயி ஒருவருக்கு உலர் தீவனம் மானிய விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2/-வீதம் வழங்கப்பட்டு வருகிறது. எனவேஇ கால்நடை வளர்ப்போர் தங்கள் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் உலர் தீவனக் கிடங்கு அமைந்துள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மண்டல இணை இயக்குநர் (கூ.பொ)
கால்நடை பராமரிப்புத் துறை
கன்னியாகுமரி(இ) நாகர்கோவில்

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்